ஓம் சரவணஜோதியே நமோ நம

## ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

18.09.2025

1. ஞான தீட்சை தந்தருளும்
ஞானபண்டிதா உமை போற்றி
ஞானபலம் உலக மக்கள் அடைய
ஞானிகள் பூசை செய்திட அருளிய

2. அருளிய வேலவா உமை போற்றி
ஆறுமுக அரங்கன் யானும்
அருளாசி தன்னை வரமாக
அறிவிப்பேன் விசுவாவசு நங்கை திங்கள்

3. திங்களிலே முதல் குருவார ஆசி
தேசிகனும் தீட்சை பலமாகவே
ஓங்கார குடில்தன்னில் அருள்வேன்
ஓங்கார குடில்நோக்கி மக்கள் வர

4. வருகவே ஞான வாழ்வு தன்னை
வரமாகப் பெற்று சிறப்பர்
தரும வழிகள் தனை அறிந்தும்
தருமவான்களாக மாற்றம் அடைவர்

5. அடையவே ஆறுமுகக் கடவுளே
அன்னதான சேவை நடத்திட
தடையின்றி பிரணவக்குடில் வந்து
தருமத்தில் பொருளுதவி செய்து

6. செய்துமே முருகா அரங்கா
செயல்பாடு யாவும் தயவாகி
மெய்ஞானமும் தந்தருளி வா என
மக்களெல்லாம் வேண்டி வர

7. வருகவே அவரவர் வாழ்வில்
வளமும் தேகமன பலமும்
பெருமை மிக்க வாழ்வுமாக
பூவுலகில் கண்டு சிறப்பர்

8. சிறப்பாக்க வருகின்ற நல்
சித்தி விழா தவதீட்சை விழாவில்
மறுப்பின்றி உலக மக்களெல்லாம்
மனதார வந்து கலந்து நன்கு

9. கலந்துமே அருளுமுது உண்டு
கந்தப் பெருமானும் அரங்கன் யானும்
கலந்துமே சீடன் ராம்குமாரின்
கரங்கள்பட தருகின்ற தீட்சையை

10. தீட்சையை உலக மக்கள் ஏற்க
தீவினை முன்வினை யாவுமே
தீட்சையால் அகன்று மேவியே
தொடருமே முன்னேற்றமே மாற்றமாக

11. ஆகவே ஞானவாழ்வும் சித்தியாகி
அணுகும் பிறவா பேறும் இனி
மகான்கள் தரிசனம் கிட்டி
மண்ணுலகை மாற்றும் சக்திகள் ஆவர்
குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி